## காஞ்சிபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்.- இரா.பன்னீர்செல்வம், எம்.ஏ., பி.எட்.,

ந.க.18931/2018/அ4 நாள்.-11.02.2022

பொருள்.- கருணை அடிப்படையில் பணி நியமனம் - காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் - முதல் நிலை காவலராக பணிபுரிந்து கடந்த 05.02.2007-ல் அன்று பணியிடையே காலமான திரு.மாடசாமி என்பவரது மனைவி - திருமதி.கே.கஸ்தூரி - என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணி நியமனம் வழங்கியது - தனியரை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 03.12.2018 முற்பகல் பணிவரன்முறை செய்து உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை.-
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.18931/2018அ4/நாள்.-30.11.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.-26.02.2021
3. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம் சென்னை - 5 அவர்களின் கடித எண்.ஆ.கு,3/ 18395/2020/நாள்.-06.08.2021

((((()))))

ஆணை.-

காஞ்சிபுரம் மாவட்டம், விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில், முதல் நிலை காவலராக பணிபுரிந்து கடந்த 05.02.2007-ல் அன்று பணியிடையே காலமான திரு.மாடசாமி என்பவரது மனைவி திருமதி.கே.கஸ்தூரி என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின் படி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியிடம் வழங்கப்பட்டது. தனியர் 03.12.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

2.பார்வை 2 -ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3-ல் காணும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களுக்கு பணி நியமன அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (Appointing Authority) என்ற நிலையில், ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் மாவட்ட வருவாய் அலுவலர் (அ) மாவட்ட ஆட்சியர் பணி நியமன அலுவலராக இருக்கும் பட்சத்தில் ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் என்ற நிலையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணி